**நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை– மரு. அ. அருண் தம்புராஜ் , இ.ஆ.ப.,**

**நக. எண். 1768 / 2020 பேரூ. 2** **நாள்– .12.2021**

பொருள்– பணிக்குழு – நேரடிநியமனம் – பேரூராட்சிகள் நிர்வாகம் – தஞ்சாவூர் மண்டலம் – நாகப்பட்டினம் மாவட்டம் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் – தொகுதி IV- உட்பட்ட பதவிகள்– **2018-2019** மற்றும் **2019-2020** ஆம் ஆண்டுகளுக்கு– தெரிவு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்ட வரித்தண்டலர்கள் அவர்களது பணி நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை–
1. செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை கடிதம் எண். 2480/PSD – I / 2020 நாள் 26.05.2020.
2. நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கைகள் ந.க. எண். 1768/ 2020 பேரூ. 2 நாள் 23.08.2020.
3. சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்களிடமிருந்து வரப்பெற்ற கருத்துருக்கள்.
4. சம்பந்தப்பட்டவர்களின் பணிப்பதிவேடுகள்.
5. மற்றும் தொடர்புடைய ஆவணங்கள்.

---

__ஆணை__

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தொகுதி– IV இல் அடங்கிய பணிகளுக்கு, 2018-2019 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட காலிப்பணியிடங்களுக்கு நடத்தப்பட்ட போட்டித் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றவர்களிலிருந்து பார்வை 1இல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடிதத்தின்படி நாகப்பட்டினம் மாவட்ட பேரூராட்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நபர்களுக்கு பார்வை 2இல் காணும் விவரப்படி சம்பந்தப்பட்ட பணியாளர்களை வரித்தண்டலர்களாக ரூ.**19500 – 62000** நிலை–**8** என்ற ஊதிய விகிதத்தில், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் செயல்முறை ஆணையின்படி, கீழ்கண்டவாறு தற்காலிகமாக வரித்தண்டலர்களாக பணிநியமனம் செய்து உத்திரவிடப்பட்டது.

| வ. எண். | பணியாளர் பெயர் மற்றும் தற்போது பணிபுரியும் பேரூராட்சி (திருவாளர்கள்) | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 1 | இ. ஜெகவீரபாண்டியன்,<br>வரித்தண்டலர்,<br>திட்டச்சேரி பேரூராட்சி,<br>நாகப்பட்டினம் மாவட்டம். | 28.08.2020 மு.ப. |
| 2 | ர. தமீம்அன்சாரி,<br>வரித்தண்டலர்,<br>வேளாங்கண்ணி பேரூராட்சி,<br>நாகப்பட்டினம் மாவட்டம். | 31.08.2020 மு.ப. |
| 3 | ம. மதன்ராஜ்,<br>வரித்தண்டலர்,<br>கீழ்வேளூர் பேரூராட்சி,<br>நாகப்பட்டினம் மாவட்டம். | 02.09.2020 மு.ப. |

எனவே, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெற்ற தொகுதி 4இல் அடங்கிய 2018-2019 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டுகளுக்கு தெரிவு செய்யப்பட்டு, நாகப்பட்டினம் மாவட்ட பேரூராட்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 2இல் காணும் விவரப்படி நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் செயல்முறை ஆணையின்படி, தற்காலிகமாக வரித்தண்டலர்களாக பணியமர்த்தப்பட்டு, பணிபுரிந்து வரும் மேற்படி பட்டியலில் கண்டுள்ள பணியாளர்களை அவர்களது பணி நிலையான வரித்தண்டலர் நிலையில், அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் கீழ்காணும் விவரப்படி பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் பெயர் மற்றும் தற்போது பணிபுரியும் பேரூராட்சி (திருவாளர்கள்) | பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறை செய்ய வேண்டிய நாள் |
|---|---|---|---|
| 1 | இ. ஜெகவீரபாண்டியன்,<br>வரித்தண்டலர்,<br>திட்டச்சேரி பேரூராட்சி,<br>நாகப்பட்டினம் மாவட்டம். | 28.08.2020 மு.ப. | 28.08.2020 மு.ப. |
| 2 | ர. தமீம்அன்சாரி,<br>வரித்தண்டலர்,<br>வேளாங்கண்ணி பேரூராட்சி,<br>நாகப்பட்டினம் மாவட்டம். | 31.08.2020 மு.ப. | 31.08.2020 மு.ப. |
| 3 | ம. மதன்ராஜ்,<br>வரித்தண்டலர்,<br>கீழ்வேளூர் பேரூராட்சி,<br>நாகப்பட்டினம் மாவட்டம். | 02.09.2020 மு.ப. | 02.09.2020 மு.ப. |

மாவட்ட ஆட்சித் தலைவர்
நாகப்பட்டினம்.

9/12/21

9/12/2021

பெறுநர்
சம்பந்தப்பட்ட பேரூராட்சி இளநிலை உதவியாளர்கள், நாகப்பட்டினம் மாவட்டம்.
(சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர் மூலமாக).

9/12/21

நகல்– சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்கள், நாகப்பட்டினம் மாவட்டம்.
நகல்– மாவட்ட ஆட்சியரின் முகாம் உதவியாளர், நாகப்பட்டினம் மாவட்டம்.
நகல்– சம்பந்தப்பட்ட பணியாளர்களின் பணிப்பதிவேடு.
நகல்– பேரூ. 2 இருப்பு கோப்பு.